IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**MCOP.No.214/2020**

**நாள் – 18.10.2023**

**லெட்சுமி**

**ம.சா.1** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

12.08.2018 ம் தேதி இரவு 10.15 மணிக்கு விபத்து நடந்திருக்கிறது. நான் அதை நேரில் பார்க்கவில்லை. புளியங்குடி காவல் நிலையத்தில் என்னுடைய கணவர் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்க்காததால் விபத்து எவ்வாறு நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. விபத்தில் ஈடுபட்ட என்னுடைய கணவர் ஓட்டிச் சென்ற ஆட்டோ 1 ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். புளியங்குடி காவல் நிலையத்தில் ராதாகிருஷ்ணன் என்பவர் தான் புகார் கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். அந்த ராதாகிருஷ்ணன் இறந்துபோன என்னுடைய கணவரின் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். 12.08.2018 ல் விபத்து நடந்தபிறகு 07.10.2018 ல் என்னுடையக கணவர் இறந்திருக்கிறார் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என்னுடைய கணவருக்கு அந்த வாகனத்தை ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. புளியங்குடி காவல் நிலையத்தில் இந்த விபத்திற்கு என்னுடைய கணவர் தான் காரணம் என்று மேல்நடவடிக்கை கைவிடப்பட்டிருக்கிறது என்றால் அதற்கு ஆட்சேபனை தெரிவித்திருக்கிறோம். விபத்து சமயத்தில் என்னுடைய கணவருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதாலும், என்னுடைய கணவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் மோதி இந்த விபத்தை ஏற்படுத்தியதாலும், என்னுடைய கணவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாலும், குற்ற இறுதி அறிக்கையில் என்னுடைய கணவர் மீது தான் தவறு என்று கூறியிருப்பதாலும் இந்த 2 ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு எவ்வித நஷ்ட ஈடும்

வழங்கவேண்டியதில்லை என்றும், அதனால் இந்த மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.10.18 17:42:05 +0530